<u>தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாமக்கல்</u>

முன்னிலை: திருமதி. A. சண்முகப்பிரியா, B.Sc (Agri)., B.L.,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்.

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 31 ம் நாள் வெள்ளிக்கிழமை

<u>எம்.பி. எண்.78/2026</u>
in
<u>சி.சி. எண். 409/2023</u>
<u>(CNR.No.TNNM02- 012877-2023)</u>

வெங்கடேசன், (வயது 67),
த/பெ. வீராசாமி (எ) கண்ணையன்,
எண். 13, பஜனைகோவில் தெரு,
ஜலகண்டாபுரம், சேலம் மாவட்டம். .. மனுதாரர்/ 2 ம்எதிரி

/எதிர்/

தமிழக அரசுக்காக
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு,
குற்றப்பிரிவு குற்றபுலனாய்வுத்துறை,
வடக்கு காவல் நிலையம்
நாமக்கல் மாவட்டம். .. எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இம்மனு கடந்த 15.07.2026 ம் தேதியன்று என் முன்னால் இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்/ எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.அருணகிரி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் /புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு. P.சேது அவர்கள் முன்னிலையாகியும், சமர்ப்பித்த இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

<u>உத்தரவு</u>

மனுதாரர்/2 ம்எதிரி, அவரை இவ்வழக்கில் இருந்து விடுவிக்க கோரி குவிமுச பிரிவு 239 ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>மனுதாரர்/2ம் எதிரி தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :</u>**

மனுதாரர்/2ம்எதிரி மீது, நாமக்கல் குற்றப்பிரிவு, குற்ற புலனாய்வுத்துறையினரால், சட்டப்பிரிவு 7, 13(1) (d) (i), 13(2), 10, 120B,467, 468, 341, 506(ii) இதச பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்ற எண். 1/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட வழக்கானது தற்போது நீதிமன்றத்தில் சி.சி.எண்.409/2023 என்ற எண்ணாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும், இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் மனுதாரர், 2ம் எதிரியாக சேர்க்கப்பட்டிருந்ததாகவும், ஆனால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விரிவான மற்றும் முழுமையான புலனாய்வின் போது, மனுதாரர் /2ம் எதிரி குற்றச்சாட்டுகளுடன் எந்தவித தொடர்பும் இல்லாதவர் என்பது புலனாய்வு அதிகாரியால் தெளிவாக கண்டறியப்பட்டதாகவும், மேலும், மனுதாரர்/2ம் எதிரியை, எதிரியாக அல்லாது, அவரை இவ்வழக்கில் முக்கிய சாட்சியாக கருதி கு.வி.மு.ச.பிரிவு 164ன் கீழ், அரசு தரப்பு 7ம்சாட்சியாக சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் மனுதாரர்/2ம் எதிரியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட சூழ்நிலைகளின் அடிப்படையில், மனுதாரர்/2ம்எதிரி மீது, சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு எந்தவித ஆதாரங்களும் இல்லை என்பதும், அவர் மீது எந்தவித Prima facie case கூட உருவாகவில்லை என்பதும் தெளிவாகிறது என்றும், இருப்பினும், மேற்கண்ட உண்மைகளை பொருட்படுத்தாமல், தவறுதலாக மனுதாரரின் பெயர் குற்றப்பத்திரிக்கையில் 2ம் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கின் முழுமையான ஆவணங்களையும், புலனாய்வு அதிகாரியின் அறிக்கைகளையும் கருத்தில் கொண்டு மனுதாரர்/2ம்எதிரியை இவ்வழக்கில் எதிரியாக வைத்திருப்பது சட்டப்படி சரியானது அல்ல என்றும், ஆகவே, மனுதாரர் /2ம் எதிரி தாக்கல் செய்துள்ள இம்மனுவை ஏற்று, மனுதாரரை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க உத்தரவிட கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள பதிலுரையின் சுருக்கம்:**

இவ்வழக்கின் புகார்தாரர் திருமதி. A.W.S. ஜெயசித்ரா, தனது புகாரில் தனக்கும், பத்மநாபன் என்பவருக்கும் இறந்து போன வளர்ப்பு தந்தை A.W. சாமுவேல் விட்டுச்சென்ற சொத்துக்கள் குறித்து நாமக்கல் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் O.S.No. 294/2004. O.S.No. 296/2004 வழக்குகள் நிலுவையில் உள்ளதாகவும், மேற்படி வழக்கு சம்பந்தமாக, 2013 மற்றும் 2014 ம்ஆண்டு ஜனவரி மாதத்தில் விசாரணைக்காக நாமக்கல் மாவட்ட மகிளா விரைவு நீதிமன்றத்திற்கு சென்றபோது, தனது குடும்ப உறவினரான ஜலகண்டபுரத்தை சேர்ந்த வெங்கடேசன், அவரது நண்பர் அட்வகேட் மனோகரன் என்பவரை அறிமுகம் செய்து வைத்ததாகவும், அதன்பின் இருவரும் சேர்ந்து, நாமக்கல் மகளிர் விரைவு நீதிமன்ற நீதிபதியின் உறவினர் முறை தம்பியான அண்ணாதுரை என்பவரை தனக்கு அறிமுகம் செய்து வைத்ததாகவும், அதன்பேரில், அண்ணாதுரை என்பவர், மற்ற எதிரிகளான 4 வது எதிரி ஜெயந்த்(எ) ஜெகநாதன், ரவிசங்கர், ராஜசேகர், ராஜு, முத்துக்குமார் ஆகியோர்களை தனது நண்பர்கள் என்று புகார்தாரர் திருமதி. A.W.S. ஜெயசித்ரா அவர்களிடம் எதிரி அண்ணாதுரை அறிமுகம் செய்து வைத்து, அதன் பிறகு நாமக்கல் அய்யம்பாளையம் அருகில் நீதிபதி அவர்கள் குடியிருக்கும் வீட்டில் நீதிபதி அவர்களை தாங்கள் சந்தித்ததாகவும், நீதிபதி அவர்கள் தன்னிடம், தன் தம்பியிடம் விசயத்தை சொல்லியிருப்பதாகவும், அவரிடம் பேசிக்கொள்ளுங்கள் என்று கூறியதாகவும், அதனால், தான் அண்ணாதுரையிடம் வழக்கை தங்களுக்கு சாதகமாக முடித்துக்கொடுக்க கேட்டதற்கு அண்ணாதுரை தனது மொத்த சொத்தில் 20% கமிசன் கொடுக்க வேண்டும் என கூறியதாகவும், அதற்கு மனுதாரர் ஜெயசித்ரா தன்னிடம் பணம் இல்லையெனவும், பஸ் பர்மிட் மட்டுமே தன்னிடம் உள்ளதாக கூறியதாகவும், அதற்கு அண்ணாதுரை அசல் பஸ் பர்மிட்டை தன்னிடம் கொடுக்க சொன்னதால், புகார்தாரர் A.W.S. ஜெயசித்ரா, பஸ் பர்மிட்டை 1 வது எதிரி அண்ணாதுரையிடம் கொடுத்ததாகவும், அண்ணாதுரை மூலம் 4 வது எதிரி ஜெயந்த் (எ) ஜெகநாதன், ரவிசங்கர், ராஜசேகர், ராஜு, முத்துக்குமார் ஆகியோர்

கூட்டு சேர்ந்து சேலம் ஜெயலட்சுமி பஸ் ஓனர் ராமசாமி கவுண்டரிடம் சென்று 4 வது எதிரி ஜெயந்த் (எ) ஜெகநாதன் என்பவர் TN 28 AU 7299 என்ற பதிவெண் கொண்ட பஸ் பர்மிட்டிற்கு, தான் வாரிசு என்று கூறி பஸ் பர்மிட்டை அடகு வைத்து ரூ.1 கோடி பணம் கேட்டதாகவும், எதிரி அண்ணாதுரை, புகார்தாரர் A.W.S. ஜெயசித்ராவிடம், நாமக்கல் ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் வந்து ராமசாமிகவுண்டர் பெயரில் பஸ் பர்மிட்டை மாற்றிக்கொடுக்க வேண்டும் என கூறியதாகவும், அதற்கு புகார்தாரர் A.W.S. ஜெயசித்ரா, சரியென கூறி கடந்த 28.04.2014 ம் தேதி நாமக்கல் ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு வந்து கையொப்பமிட்டு ராமசாமி கவுண்டர் பெயரில் பர்மிட்டை மாற்றிக் கொடுத்ததாகவும், புகார்தாரரிடம் பணம் கொடுக்கவில்லை என்பதால், புகார்தாரர் ஜெயசித்ரா, ராமசாமிகவுண்டர் வீட்டிற்கு சென்று பணம் கேட்டதாகவும், ராமசாமி கவுண்டர், 4 வது எதிரி ஜெயந்த் (எ) ஜெகநாதனிடம் பணத்தை கொடுத்து விட்டதாக கூறியதாகவும், அதன் பின், புகார்தாரர் தான் ஏமாற்றப்பட்டது தெரிந்து புகார்தாரர் A.W.S. ஜெயசித்ரா மற்றும் வழக்கின் எதிரிகளுக்கு பிரச்சினை ஏற்பட்டு சேலம் மாநகர அஸ்தம்பட்டி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி எதிரிகள் பஸ் பர்மிட் சம்பந்தமாக ஏமாற்றப்பட்டது குறித்து நடவடிக்கை எடுக்க கோரி சேலம் மாவட்ட குற்றப்பிரிவில் மனு கொடுத்து 1 வது எதிரி அண்ணாதுரையை விசாரணைக்கு அழைத்து விசாரித்தபோது, அண்ணாதுரை சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஜாகீர் அம்மாபாளையத்தில் தனக்கு 2 ஏக்கர் நிலம் உள்ளதாகவும், அந்த பணத்திற்கு அந்த 2 ஏக்கர் நிலத்தை எழுதிக்கொடுப்பதாக அண்ணாதுரை சார்பாக 5 வது எதிரி ரவிசங்கர் எழுதிக்கொடுத்த நிலப்பத்திரம் சம்பந்தமாக விசாரித்தபோது, அந்த இடத்தில் அண்ணாதுரை பெயரில் 2 ஏக்கர் நிலம் இல்லையென தெரிய வந்ததால், மீண்டும் இது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கக்கோரி மீண்டும் சேலம் மாவட்ட குற்றப்பிரிவில் மனு கொடுத்ததன் பேரில், விசாரித்த சேலம் மாவட்டகுற்றப்பிரிவு இந்த சம்பவ இடமானது தங்கள் எல்லைக்குட்பட்டு வரவில்லை எனவும், நாமக்கல் மாவட்ட குற்றப்பிரிவில் புகார்

கொடுத்து நிவாரணம் தேடிக்கொள்ள அறிவுறுத்தியதன் பேரில், புகார்தாரர் நாமக்கல் குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததாகவும், அப்போது நாமக்கல் மாவட்ட குற்றப்பிரிவு அதிகாரிகள் பணம் கொடுக்கல் வாங்கல் அனைத்தும் சேலம் மாவட்டத்தில் நடந்துள்ளதால் மேற்படி சேலம் மாவட்ட குற்றப்பிரிவிற்கு செல்ல அறிவுறுத்தியதன் பேரில் புகார்தாரர் ஜெயசித்ரா கடந்த 12.08.2015 ம் தேதி சேலம் மாநகர காவல் ஆணையர் அலுவலகம் சென்று கொடுத்த மனுவில் நாமக்கல் மாவட்ட மகளிர் நீதிமன்ற நீதிபதி அவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருந்ததால், சேலம் மாநகர ஆணையர் அலுவலகத்திலிருந்து மேற்படி விசாரணைக்காக வழி வழியாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற பதிவாளர் லஞ்ச ஒழிப்பு தடுப்பு பிரிவிற்கு மனு ( D.O. Letter in Roc. 938/2015 VC 18.03.2016) அனுப்பி வைக்கப்பட்டதாகவும், மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற பதிவாளர் லஞ்ச ஒழிப்பு தடுப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து இந்த மனு சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ள வேண்டி தமிழ்நாடு தலைமை இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டடதாகவும், மேற்படி மனு மீது விசாரணை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி சிபிசிஐடி பிரிவிற்கு அனுப்பி வைக்க தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். R.C.No.187570/Cr2(1)–2015 Dt. 23.03.2016 ன் படி காவல்துறை கூடுதல் இயக்குநர் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை அலுவலக செயல்முறை ஆணை எண். C.No. C5/269/ 05776/2016 dt.24.03.2016 உத்தரவுப்படி நாமக்கல் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வு துறைக்கு மாற்றம் செய்து வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக சிபிசிஐடி காவல் துணை கண்காணிப்பாளர் காஞ்சிபுரம் அவர்களை நியமித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி மனு மீது நாமக்கல் சிபிசிஐடி குற்ற எண். 1/2016 சட்ட பிரிவு,U/s. 7,13 (1), (D), R/w 13(2) & 10 of the Prevention Corruption Act 1998, 102(B), 467, 468, 341 & 506(ii) IPC வழக்காக பதிவு செய்யப்பட்டதாகவும், வழக்கு புலன் விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில் முதல் தகவலறிக்கையில் எதிரியாக சேர்க்கப்பட்ட எதிரி வெங்கடேசன் என்பவரை

விசாரித்த போதும், சாட்சிகள் 1. கீதா, 2. பாலாஜி, 3. உமாமகேஸ்வரி, 4. கோகுல் ஆகியோர்களின் விசாரணையிலும், எதிரி வெங்கடேசன் என்பவர் மனுதாரருக்கு எதிரி அண்ணாதுரையை அறிமுகம் செய்து வைத்ததாகவும், அதற்காக அவர் பணமோ ஆதாயமோ பெறவில்லை என்றும் விசாரணையில் தெரிய வருவதாகவும், மேலும் விசாரணையில் புகார்தாரர் புகார் மனு கொடுக்கும் போது வெங்கடேசன் என்பவர் பெயரை வெங்கடேஷ் என்று குறிப்பிட்டு கொடுத்துள்ளதாகவும், வெங்கடேஷ் என்பது ஊரில் அழைக்கும் பட்டபெயர் என்றும், ஆனால் அவரது ஆவண்ஙகளின் அடிப்படையிலான பெயர் வெங்கடேசன் என்பதாகும் என்றும், மேலும் அவரது அப்பா பெயர் ஆவணங்களின் அடிப்படையில் வீராசாமி என்பதாலும், ஊரில் அழைக்கும் பட்டப்பெயர் கண்ணையா என்பதாகும் என்றும், மேலும் இந்த வழக்கில் வலுசேர்க்கும் வகையில் வெங்கடேசன் என்பவர் சாட்சியாக சேர்க்கப்பட்டு, கடந்த 09.11.2016 ம் தேதியன்று நாமக்கல் CJM நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து JM நீதிமன்றத்தில் மேற்படி வெங்கடேசனிடம் 164 குவிமுச வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் முந்தைய புலன்விசாரணை அதிகாரி திரு. எஸ். கிருஷ்ணன் காவல் துணைகண்காணிப்பாளர், ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு, குற்றப்புலனாய்வுத்துறை சேலம் மாநகரம் அவர்களால் புலன்விசாரணை முடித்து கடந்த 25.03.2023 ம் தேதி,குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும் போது வெங்கடேசன் என்பவரது பெயரை தவறுதலாக எதிரி கலத்தில் சேர்க்கப்பட்டு விட்டதாகவும், மேலும் சாட்சிகளின் பட்டியலிலும், சாட்சி LW7 ஆக வெங்கடேசன் என்ற பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி குற்றப்பத்திரிக்கை நீதிமன்றத்தில் கொடுத்து சரிபார்க்கப்பட்டு CC.No. 409/2023 என்ற எண் கொடுக்கப்பட்டதாகவும், வெங்கடேசன் என்பவரதுபெயரை தவறுதலாக எதிரி கலத்தில் சேர்க்கப்பட்டு விட்டது என்பதை அறிக்கையாக நீதிமன்றத்தில் சமர்பிக்கப்பட்டதாகவும், இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் இருந்த நிலையில் எதிரிகள் ஆஜராகும் போது வெங்கடேசன் என்பவர் நீதிமன்றம் ஆஜராகி

நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததாகவும், அம்மனுவில் தனது பெயர் வெங்கடேசன் என்றும், தனது தகப்பன் வீராசாமி என்றும், தங்களது ஊரில் தனது தகப்பனாரின் பெயரை கண்ணையா என்று அழைப்பார்கள் என்றும், அதையே இந்த வழக்கின் புகார்தாரர் ஜெயசித்ரா அவர்கள் அவரது புகாரில் தனது தந்தையின் பெயரை கண்ணையா என்று குறிப்பிட்டு கொடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளதாகவும், மேலும் இது சம்பந்தமாக வழக்கின் புலன்விசாரணை அதிகாரி தரப்பில் வெங்கடேசன் என்பவரது அப்பாவின் பெயர் ஆவணங்களின் படி வீராசாமி என்பதை குறிப்பிட்டு கடிதம் கொடுக்கப்பட்டதாகவும், இந்த வழக்கில் குற்றப்பத்திரிக்கையில் எதிரி கலத்தில் உள்ள தனது பெயரை விடுவிக்க வேண்டி வெங்கடேசன் மனு தாக்கல் செய்து உள்ளதாகவும் மேற்படி மனுவை நீதிமன்றம் பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பிக்குமாறும் கேட்டு பதிலுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. <u>புகார்தாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

மேற்கண்ட வழக்கில் 2 வது எதிரி வெங்கடேசன் மீது நாமக்கல் குற்றப்பிரிவு குற்றபுலனாய்வுத்துறையினரால், U/s. 7,13 (d) (i), 13(2),10, 102B, 467, 468, 341 & 506(ii)இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, குற்ற எண். 1/2016 எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட வழக்கானது, தற்போது நீதிமன்றத்தில் சி.சி.எண்.409/2023 என்ற எண்ணாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும், இவ்வழக்கில் 2 வது எதிரியாக வெங்கடேசன் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், மேலும், மனுதாரர் / 2 ம்எதிரியை, எதிரியாக அல்லாது, அவரை இவ்வழக்கில் முக்கிய சாட்சியாக கருதி, குவிமுச பிரிவு 164 ன் கீழ், அரசு தரப்பு 7 வது சாட்சியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி வழக்கில் உள்ள அனைத்து சம்பவ விவரங்களும் மற்றும் தொடர்புடைய முக்கிய உண்மைகளும் 2 ம் எதிரிக்கு முழுமையாகத் தெரிந்துள்ள நிலையில், அவர் விசாரணைக்கு உதவும் முக்கியமான மற்றும் அவசியமான சாட்சியாக உள்ளதாகவும், எனவே இவ்வழக்கின்

முழுமையான விசாரணைக்காக 2ம் எதிரியை அரசு தரப்பு 7ம் சாட்சியாக (LW7) ஏற்றுக்கொள்வது அவசியமானதும், நியாயமானதும் என்றும், ஆகவே இவ்வழக்கின் 2ம்எதிரி வெங்கடேசனை இவ்வழக்கிலிருந்து விடுவித்து அரசு தரப்பு 7ம் சாட்சியாக (LW7) ஏற்றுக் கொள்வதில் புகார்தாரருக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்பதை பதிவு செய்து தக்க உத்தரவு பிறக்க வேண்டுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

5. **பிரச்சினை:**

மனுதாரர் /2ம் எதிரி தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சினையாகும்

6. **தீர்வு :**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7. மேற்படி மனு, மனுதாரர் / 2ம்எதிரி வெங்கடேஷனால், அவரை இவ்வழக்கில் இருந்து விடுவிக்க கோரி, கு.வி.மு.ச பிரிவு 239 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. மனுதாரர் / 2ம் எதிரி தரப்பில், முதல் தகவல் அறிக்கையில், மனுதாரர், 2ம் எதிரியாக சேர்க்கப்பட்டிருந்த போதிலும், பின்னர் மேற்கொள்ளப்பட்ட விரிவான மற்றும் முழுமையான புலனாய்வின் போது, மனுதாரர்/2ம்எதிரி, இந்த வழக்கின் குற்றச்சாட்டுக்களுடன் எந்தவித தொடர்பும் இல்லாதவர் என்பது புலனாய்வு அதிகாரியால் தெளிவாக கண்டறிப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் /2ம் எதிரியை எதிரியாக அல்லாது, அவரை இவ்வழக்கின் முக்கிய சாட்சியாக கருதி, கு.வி.மு.ச பிரிவு 164 ன் கீழ், அரசு தரப்பு 7ம் சாட்சியாக, சம்மந்தப்பட்ட நீதிமன்றத்தில் மனுதாரர்/2ம்எதிரியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் / 2ம்எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு எந்தவித ஆதாரங்களும் இல்லை என்பதும், அவர் மீது எந்த விதமான Prima facie caseம் இல்லை என்பதும் தெளிவான நிலையில், தவறுதலாக மனுதாரரின் பெயர் குற்றப்பத்திரிக்கையில் 2ம்எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், அது சட்டப்படி சரியல்ல என்றும், எனவே,

இந்த வழக்கின் ஆவணங்களையும் புலனாய்வு அதிகாரியின் அறிக்கைகளையும் கருத்தில் கொண்டு, மனுதாரர் /2ம் எதிரியை, இவ்வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டுமென வாதிடப்பட்டது.

9. அவ்வாறிருக்க அரசு தரப்பில், வழக்கு புலன் விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில், முதல் தகவல் அறிக்கையில் எதிரியாக சேர்க்கப்பட்டிருந்த இந்த மனுதாரர் / எதிரி வெங்கடேசனை விசாரித்த போதும், சாட்சிகள், கீதா, பாலாஜி, உமாமகேஷ்வரி, கோகுல் ஆகியவர்களின் விசாரணையில் இருந்தும், மனுதாரர் / எதிரி வெங்கடேசன், இந்த வழக்கின் குற்றமுறையீட்டாளருக்கு, எதிரி அண்ணாதுரையை அறிமுகம் செய்து வைத்துள்ளார் என்பதும், அதற்காக அவர் பணமோ, எந்த ஆதாயமோ பெறவில்லை என்பதும், விசாரணையில் தெரிய வந்ததாகவும், இந்த வழக்கிற்கு வலுசேர்க்கும் வகையில், மனுதாரர் வெங்கடேசன் சாட்சியாக சேர்க்கப்பட்டு, கடந்த 09.11.2016ம் தேதியன்று, இந்நீதிமன்றத்தில், மனு தாக்கல் செய்து, அதன் அடிப்படையில், குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில், மேற்படி வெங்கடேசனிடம், குவிமுச பிரிவு 164 ன் கீழ் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் முந்தைய புலன்விசாரணை அதிகாரியான, திரு.எஸ்.கிருஷ்ணன், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், புலன் விசாரணை முடித்து, கடந்த 25.03.2023 தேதி, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும் போது, வெங்கடேசன் என்பவரது பெயரை, தவறுதலாக, எதிரிகள் பெயர், குறிப்பிடப்பட்டுள்ள கலத்தில் சேர்த்து விட்டதாகவும், சாட்சிகளின் பட்டியலிலும், அரசுத்தரப்பு சாட்சி 7 ஆக, வெங்கடேசன் பெயர் சேர்க்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி குற்றப்பத்திரிக்கை நீதிமன்றத்தில் கொடுத்து, சரிபார்க்கப்பட்டு, CC.No. 409/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் வெங்கடேஷனின் பெயர், தவறுதலாக, எதிரிகள் கலத்தில் சேர்க்கப்பட்டு விட்டதாக குறிப்பிடப்பட்டு, அறிக்கை ஒன்று இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கு விசாரணையில் இருந்த நிலையில், எதிரிகள் ஆஜரான போது, மனுதாரர் வெங்கடேசனும் நீதிமன்றம் ஆஜராகி, மனு தாக்கல் செய்துள்ளதாகவும்

வாதிடப்பட்டது. அரசுத் தரப்பில், மேற்படி மனுதாரர் /2ம் எதிரி வெங்கடேசனை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க, எந்த விதமான ஆட்சேபனையும், தெரிவிக்கப்படவில்லை.

10. அவ்வாறிருக்க, இந்த வழக்கின் புகார்தாரரான A.W.S. ஜெய்சித்ரா, தாக்கல் செய்துள்ள பதிலுரையில், இந்த வழக்கில், மனுதாரர் வெங்கடேசன், 2ம் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் / 2ம் எதிரியை, எதிரியாக அல்லாது, அவரை வழக்கில் முக்கிய சாட்சியாகக் கருதி, கு.வி.ச.பிரிவு 164ன் கீழ், அரசுத் தரப்பு 7வது சாட்சியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்கூறிய வழக்கில் உள்ள அனைத்து சம்பவங்களும், மற்றும் அதன் தொடர்புடைய முக்கிய உண்மைகளும், 2ம்எதிரிக்கு முழுமையாக தெரிந்துள்ள நிலையில், அவர் விசாரணைக்கு உதவும் முக்கியமான, மற்றும் அவசியமான சாட்சியாக உள்ளார், எனவே, இவ்வழக்கின் முழுமையான விசாரணைக்காக, 2ம்எதிரியை, அரசுத் தரப்பு 7ம் சாட்சியாக ஏற்றுக்கொள்வது, அவசியமானதும், நியாயமானதுமாகும் என்றும், எனவே, மனுதாரர் / 2ம் எதிரி வெங்கடேசன் தரப்பில், தாக்கல் செய்யப்பட்டுள்ள, மனுவை ஏற்று, இவ்வழக்கின் 2ம்எதிரி வெங்கடேசனை வழக்கிலிருந்து விடுவித்து, அரசுத் தரப்பு 7ம் சாட்சியாக ஏற்றுக்கொள்ள, புகார்தாரராகிய தனக்கு, எந்த ஆட்சேபணையும் இல்லை என்று குறிப்பிட்டு, பதிலுரை தாக்கல் செய்துள்ளார்.

**11. இந்த வழக்கின் ஆவணங்களை பார்வையிடுகையில், இந்த மனுவின் மனுதாரர் / 2ம் எதிரியாக காட்டப்பட்டுள்ள வெங்கடேசன், கடந்த 09.11.2016ம் தேதி, பரமத்தி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில், ஆஜராகி, குவிமுச பிரிவு 164ன் கீழ் வாக்குமூலம் அளித்துள்ளது தெளிவாகிறது.**

12. அவ்வாறிருக்க, சேலம் மாநகர குற்றப் பிரிவு, குற்ற புலனாய்வுத் துறை, **காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களால் இந்நீதிமன்றத்தில், தாக்கல் செய்யப்பட்டுள்ள 25.03.2023ம் தேதியிட்ட அறிக்கையில், K.Venkatesh, S/o. Kannaiyan has no role in the criminal act and his statement with regard to this case has been**

taken as witness to establish or substantiate the allegation of this case, and hence his name was not included in the list of accused, and in the interest of the case and justice, his name was added in the list of witnesses to strengthen the case.

13. அவ்வாறிருக்க, குற்றப்பத்திரிகையில், மேற்படி, மனுதாரர் வெங்கடேசன் 2ம் எதிரியாக காட்டப்பட்டுள்ளார்.

14. இந்நீதிமன்றத்தில் காவல்துணை கண்காணிப்பாளர், திட்டமிட்ட குற்றங்கள் பிரிவு, குற்ற பிரிவு குற்ற புலனாய்வு துறை, சேலம் மாநகரம், அவர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 25.03.2023ம் தேதியிட்ட அறிக்கையில், வழக்கில் சம்பந்தப்பட்ட 55 ஆவணங்கள், 106 சாட்சிகளின் வாக்குமூலங்கள், சாட்சிகளின் பட்டியல், ஆவணங்களின் பட்டியல், எதிரிகள் அண்ணாதுரை, செல்வி, மான்விழி, ராசு என்ற சேசுராஜ் ஆகியோரின் இறப்புச் சான்றுகள், மற்றும் எதிரி வெங்கடேஷன் என்பவரை எதிரிகள் பட்டியலிலிருந்து நீக்கி, சாட்சியாக சேர்த்த அறிக்கை ஆகியவைகள், வழக்கின் நிமித்தமாக சமர்ப்பிக்கப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

15. மேலும், இந்த வழக்கின் ஆவணங்களைப் பார்வையிடுகையில், 20.08.2024ம் தேதி, நாமக்கல் மாவட்டம் குற்றப் பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை, காவல் ஆய்வாளரால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில், இந்த வழக்கின் முதல் தகவலறிக்கையில் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ள வெங்கடேசன் என்பவரை, புலன் விசாரணை செய்ததின் அடிப்படையிலும், சம்பந்தப்பட்ட ஆவணம் அடிப்படையிலும், மேற்படி எதிரியானவர் குற்றத்தில் ஈடுபடவில்லை என தெரியவந்ததால், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி அவரை சாட்சியாக பாவித்து, சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில், நீதித்துறை நடுவர் முன்பு 164 குவிமுச பிரிவின் கீழ் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில், இவ்வழக்கின் குற்றப்பத்திரிக்கையில், மனுதாரர் வெங்கடேசன் 2ம் எதிரியாக தவறுதலாக சேர்க்கப்பட்டு, பின்பு குற்றப்பத்திரிக்கையிலிருந்து, 2ம்எதிரி வெங்கடேசனை, நீக்கம் செய்ய வேண்டி, Deletion Report

சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி, மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள சேலம் மாநகர திட்டமிட்ட குற்றங்கள் பிரிவு, குற்றப்புலனாய்வுத்துறை துணை கண்காணிப்பாளர் அவர்களால், தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையில், இந்த வழக்கின் குற்றச் செயல்களில், மனுதாரர் வெங்கடேசனுக்கு எந்த விதமான பங்கும் இல்லை என்றும், அதனால், அவருடைய பெயர், எதிரிகளின் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு, சாட்சிகளின் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

16. இந்த வழக்கின் ஆவணங்களை பார்வையிடுவையில், இந்த மனுதாரர் வெங்கடேசன், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள அரசுத்தரப்பு சாட்சிகள் பட்டியலில் 7 வது சாட்சியாக காட்டப்பட்டுள்ளார்.

17. ஒரு வழக்கில் ஒரு நபர் எதிரியாக இருக்கும் பட்சத்தில், அவரை அரசுத்தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய இயலாது. அவ்வாறிருக்க, இந்த வழக்கில், மேற்படி மனுதாரர் / வெங்கடேசன், அரசுத்தரப்பு சாட்சிகள் பட்டியலில் 7 வது சாட்சியாக காட்டப்பட்டுள்ளார். அவ்வாறிருக்க, சேலம் மாநகர குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத்துறை, துணைக் கண்காணிப்பாளர் அவர்களால், தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கையில், மேற்படி மனுதாரர் / வெங்கடேசன், இந்த வழக்கில் எந்தவிதக் குற்றச்செயலிலும் ஈடுபடவில்லை என்றும், அவர் இந்த வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யப்பட்டு, வாக்குமூலம் அளித்துள்ளார் என்றும், மேற்படி, மனுதாரர் வெங்கடேசனின் வாக்குமூலங்கள், இந்த வழக்கிற்கு வலுசேர்ப்பதாக இருக்கும் காரணத்தினால், நீதியின் நலன் பொருட்டு, அவரது பெயர் எதிரிகளின் பட்டியலில் சேர்க்கப்படாமல், சாட்சிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டு, 25.03.2023 ம் தேதி, அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், தவறுதலாக, மனுதாரர் வெங்கடேசனின் பெயர் எதிரிகள் கலத்தில் சேர்க்கப்பட்டு விட்டதாகவும், அவரை எதிரிகள் பட்டியலிருந்து நீக்கம் செய்ய வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. மேலும்,

குற்றமுறையீட்டாளரான, A.W.S. ஜெய்சித்ரா, தன்னுடைய பதிலுரையில், இந்த வழக்கின் மனுதாரர், அரசுத்தரப்பு சாட்சிகள் பட்டியலில், 7 வழ சாட்சியாகக் காட்டப்பட்டுள்ளார். மேலும், அவர் குவிமுச பிரிவு 164 ன் கீழ், நீதிமன்றத்தின் முன்பு, வாக்குமூலம் அளித்து அது பதிவு செய்யப்பட்டு, கோப்பில் உள்ளது. இந்த வழக்கின் அனைத்து சம்பவ விவரங்களும், அதன் தொடர்புடைய முக்கிய உண்மைகளும், மனுதாரர் வெங்கடேசனுக்கு முழுமையாக தெரிந்துள்ள நிலையில், அவர் விசாரணைக்கு உதவும் முக்கியமான மற்றும் அவசியமான சாட்சியாக உள்ளார். என்றும், எனவே, வழக்கின் முழுமையான விசாரணைக்காக, 2ம் எதிரியாக காட்டப்பட்டுள்ள வெங்கடேசனை, அரசுத்தரப்பு 7ம் சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கின் புலனாய்வு அதிகாரி, தன்னுடைய அறிக்கையில், இந்த வழக்கின் எதிரிக்கு எதிராக, எந்த விதமான குற்றச்செயலுக்கான ஆதாரமும் இல்லை என்று, அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

18. பொதுவாக, எதிரி ஒருவரை, அரசுத்தரப்பு சாட்சியாக விசாரிக்க இயலாது. அவ்வாறு விசாரிக்கப்பட வேண்டுமாயின், அவர் எதிரியாக சேர்க்கப்படக் கூடாது.

19. மேற்கண்ட அனைத்து சங்கதிகளையும் ஆராய்கையில், அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள, Delection report யை ஏற்று, மனுதாரர்/ 2ம் எதிரி வெங்கடேசனை, இவ்வழக்கிலிருந்து விடுவித்து, அவரை அரசுத்தரப்பு 7 வது சாட்சியாக விசாரிக்க, அனுமதிப்பது நீதியின் பால் அவசியம் என்று இந்நீதிமன்றம் கருதி இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

முடிவாக, இந்த மனு அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் / 2ம்எதிரி வெங்கடேசன், இவ்வழக்கிலிருந்து, விடுவிக்கப்பட்டு, உத்தரவு பகரப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு, சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம்

செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 31ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/ A.சண்முகப்பிரியா.
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
நாமக்கல்.